28th April 1960]

SRI P. G. MANICKAM : அவ்வாறு தேசிய கவுன்ஸில் அமைக்கப்படுமானல், இதில் எல்லா ஜில்லாக்களின் பிரதிநிதிகளை யும் உட்படுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கவுன்ஸில் நிறுவுவதைப் பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. முடிவு செய்து பின்னுல் இதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

* 857 Q.—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) மாதர் கல்வி முன்னேற்றத்திற்கு மத்திய அரசாங்கம் விசேஷ சலுகை காட்டுகிறதா?

(ஆ) அதன் விபரமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Yes, Sir.

(ஆ) Under the Centrally Sponsored Scheme for expansion of Girls' Education and Training of Women Teachers, the Government of India give grants towards 75 per cent of the total expenditure that might be incurred by the State Government on the following items:—

1. Provision of free accommodation for women teachers in rural areas.

2. Appointment of School Mothers in rural areas.

3. Organization of condensed and special courses combining general education and teacher training for adult women.

4. Stipends for women teacher trainees.

5. Organization of refresher course for trained women.

6. Stipends for girl students of classes VIII to XI to cover tuition and other fees, books and stationery.

The total Central grant available every year is fixed beforehand.

SRI A. VEDARATHNAM : மத்திய அரசாங்கத்தின் இந்த மான்யத்தை பயன்படுத்திக்கொள்வதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் படித்த பட்டியலில் எந்தெந்த இனத்தில் எவ்வளவு எவ்வளவு நாம் பயன் படுத்தியிருக்கிறோம். அதற்கு என்ன திட்டங்கள் இருக்கின்றன?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி நான் நேற்று விரிவாகச் சொன்னேன். இவர்களுக்கு 252 வீடுகள் கட்டி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. Appointment of school mothers என்கிற திட்டத்தை நாம் இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை . . . . . .

Organization of combined and special courses combining general education and teacher training for adult women

இதை சில ஸ்தாபனங்களில் மட்டும் நடத்திக்கொண்டி ருக்கிறார்கள், அதற்கு நாம் உதவி செய்து வருகிறோம் . . . . .

Stipends for women teachers என்பதில் இப்போதும்

கொடுத்துக்கொண்டு இருக்கிறோம் . . . . .

Organization or refresher Courses for trained woman இதையும் செய்து கொண்டுதான் இருக்கின்றோம் . . . .

Stipends for girl students of Classes VIII to XI to cover tuition and other fees, books and stationery
இதற்கும் நாம் கூடியவரையில் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். . .

SRI R. KRISHNASAMI NAIDU: சபாநாயகர் அவர்களே, பெண்களுக்கு தனியாக ஆசிரிய பயிற்சி பள்ளிகள் நம் ராஜ்யத்தில் மிகவும் குறைவாகத்தான் இருக்கின்றன. ராமனுதபுரம் ஜில்லாவில் ராமனுதபுரத்திலும், பாளையம் பட்டியிலும்தான் இந்தப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வருஷத்திலும் இதனால் அனேகம் பேர்கள் விண்ணப்பம் செய்தும் இடம் பெறுமல் போய்விடுகின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த நிதியை பயன்படுத்தியாவது கூடுதல் பயிற்சி பள்ளிகளை ஆரம்பிக்கவோ அல்லது தனியார்கள் நடத்த வந்தால் அதற்கு ஆக்கம் கொடுக்கவோ அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: நாம் கவனிக்க வேண்டியது எத்தனை போர்கள் நமக்கு தேவை என்பதை நிர்ணயம் செய்யவேண்டும். அதற்குத் தகுந்தவாறுதான் ஆசிரிய பயிற்சிப் பள்ளிகளை நிறுவ வேண்டும். இல்லையென்றால் பயிற்சி பெற்ற பின்னல் வேலை கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏற்பட்டு கஷ்டப்பட வேண்டியிருக்கும்.

SRI A. GOVINDASAMY: பெண் ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தில் இப்போது 252 வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது என்று சொன்னார்கள். இதில் எவ்வளவு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன? இன்னும் கட்டவேண்டியிருக்கின்றன என்றால் அதற்கு தடை ஏதாவது இருக்கிறதா, அப்படியானல் அவைகள் என்ன என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இதை ஜில்லா போர்டு மூலமாக செய்யலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான இடம் நிர்ணயிப்பதில் சில கஷ்டங்கள் ஏற்படு கின்றன. இந்த வருஷத்தில் இவைகளை எல்லாம் கட்டி முடித்து விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI K. B. S. MANI: இந்த மாதர் நல முன்னேற்றத்திற்காக மத்திய சர்க்காரிலிருந்து ஒதுக்கப்படும் பணத்தை எல்லாம் சென்னையிலுள்ள பெரிய இடத்து பெண்கள் வைத்துக் கொண்டிருக்கிற ஸ்தாபனங்கள் மூலமாக வாங்கி தங்களுடைய சொந்தப் பொருளாக உபயோகித்து, தங்களுடைய சுற்றத் தாருக்கு எல்லாம் கொடுத்து வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானல் இந்த நிலைமையை மாற்றி ஜில்லா ரீதியாக எல்லோரும் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

28th April 1960]

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தத் திட்டத்தின் கீழ் யார் யாரெல்லாம் வேலை செய்து வருகிறார்களோ, அல்லது எந்தெந்த ஸ்தாபனங்கள் எல்லாம் வேலை செய்து வருகிறதோ அந்த ஸ்தாபனங்களுக்குத்தான் கொடுக்க முடியும். இதன் கீழ் ஒரு வேலையுமே செய்யாத இடங்களுக்கு அல்லது ஸ்தாபனங்களுக்கு எப்படி கொடுக்க முடியும்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், மாதர்கள் சகலத் துறைகளிலும் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருப்பவர்கள். சமூக முன்னேற்றத்திற்கு முக்கியமானவர்கள், மாதர்கள். ஆகவே, அவர்கள் தீவிரமாக கல்வியில் முன்னேறுவதற்காக உடனடியாக ஏதாவது செய்யவேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் உணருகிறார்களா ? அப்படியானால் அதை முன்னிட்டு மாதர்களுக்கு கல்வி கிடைப்பதற்காக ஹரிஜனங்களுக்குக் கல்விச் சலுகைக் கொடுப்பதுபோல் எல்லா சலுகைகளும் கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பெண்கள் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது அவர்களுடைய சொந்த அனுபவமாய் இருக்கலாம். அதைப்பற்றி எங்களுக்குத் தெரியாது. அதுமட்டுமல்ல, அவ்வாறு அடக்கி ஒடுக்கி வைப்பது தவறு. அவர்களுக்கு கல்வி கொடுப்பதற்காக எல்லா சலுகைகளும் கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

Playgrounds for schools

* 858 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to assign playgrounds for each Secondary School in this State ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI K. ANBAZHAGAN : மாணவர்களிடையே, நல்ல ஒழுக்கத்தையும் நேர்மையையும் வளர்க்கவேண்டுமானால், முக்கியமாக தேக பயிற்சியும், அதற்கொத்த விளையாட்டு வாய்ப்புகளும் வேண்டுமென்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளுகிறதா ? அப்படியானால் அவர்களுக்கு தேவையான விளையாட்டு மைதானங்களை அளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் கேட்டிருக்கிற கேள்வியில் . . . . . .
to assign playground for each Secondary school in this state என்று இருக்கிறது. இது முடியாத காரியம். இந்த விஷயம் முன்னமேயே பட்ஜெட் உரையின் போது கூட விவாதிக்கப்பட்டிருக்கிறது. போன வருஷம் இதற்காக 72,500 ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இது 24 பள்ளிக்கூடங்களுக்காக ஒதுக்கப்பட்டது. மேலும் இந்த வருஷமும் இதற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் போய்க்கொண்டிருந்தால் இன்னும் நான்கைந்து வருடங்களில் எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் இது கிடைத்துவிட முடியும் என்று நினைக்கிறேன்.